©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 303] CHENNAI, TUESDAY, SEPTEMBER 6, 2011
Aavani 20, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

#### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர்.**

**திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எஸ்.ஆர். கண்டிகை ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் குறித்த அறிவிக்கை.**

*[ந.க. எண் 326/10/அ3/உ.இ.(ஊ).]*

**No. VI(2)/443(b1)/2011.**

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், எஸ்.ஆர். கண்டிகை ஊராட்சி மன்றத் தலைவர் திரு. டி. ரோஸ்பிள்ளை, ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்தி முறைகேடு செய்திருப்பதும் மற்றும் ஊராட்சி நிதியில் பல்வேறு தலைப்புகளின்கீழ் விதிமுறைகளைப் பின்பற்றாமல் செலவினம் மேற்கொண்டு அதன் மூலம் ஊராட்சி நிதிக்கு ரூ.33,28,321/– இழப்பு ஏற்படுத்தியது ஆகிய காரணங்களுக்காக இவர் தொடர்ந்து ஊராட்சி மன்றத் தலைவராக செயல்பட்டால் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்துவார் என்பதுடன் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வார் என்பதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு (11)—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி எஸ். ஆர். கண்டிகை ஊராட்சி மன்றத் தலைவர் திரு. டி. ரோஸ்பிள்ளை என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன்மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262 (1)—ன்கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

**திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, வெள்ளிவாயல் சாவடி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் குறித்த அறிவிக்கை.**

*[ந.க. எண் 1466/10/அ3/உ.இ.(ஊ).]*

**No. VI(2)/443(b2)/2011.**

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், வெள்ளிவாயல்சாவடி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சி. ரமேஷ், ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்தி முறைகேடு செய்திருப்பதும் மற்றும் ஊராட்சி நிதியில் பல்வேறு தலைப்புகளின்கீழ் விதிமுறைகளைப் பின்பற்றாமல் செலவினம் மேற்கொண்டு அதன்மூலம் ஊராட்சி நிதிக்கு ரூ. 14,51,419/– இழப்பு ஏற்படுத்தியது ஆகிய காரணங்களுக்காக இவர் தொடர்ந்து ஊராட்சி மன்றத்தலைவராக செயல்பட்டால் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்துவார் என்பதுடன் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வார் என்பதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு (11)—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி வெள்ளிவாயல் சாவடி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சி. ரமேஷ் என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன்மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262 (1)—ன்கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

திருவள்ளூர்,
2011 செப்டம்பர் 4.

**அஷிஷ் சாட்டர்ஜி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.